# சென்னையில் ரூ.8,000 கோடி திட்டங்கள்

## பிரதமர் மோடி இன்று தொடக்கி வைக்கிறார்



சென்னை, பிப். 13: தமிழகத்தில் ரூ. 8,000 கோடியில் புதிய திட்டங்களைத் தொடக்கி வைத்து, அடிக்கல் நாட்ட பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை சென்னை வருகிறார்.

சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெறும் நிகழ்ச்சியில், ரூ.4,486 கோடி மதிப்புள்ள புதிய திட்டங்களை அவர் தொடக்கி வைக்கிறார் மேலும்,ரூ.3,640 கோடி மதிப்புள்ள புதிய திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

**கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள்:** பிரதமர் மோடியின் வருகையை முன்னிட்டு, சென்னை முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அவர் பங்கேற்கும் விழா, நடைபெறவுள்ள நேரு விளையாட்டரங்கம் அமைந்துள்ள பகுதியைச் சுற்றிலும் காவலர்கள் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**மூன்று புதிய திட்டங்கள்:** விழாவில் மூன்று புதிய திட்டங்களை பிரதமர் மோடி தொடக்கி வைக்கிறார். சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட விரிவாக்கத் திட்டமானது வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரை ரூ.3,770 கோடியில் நிறைவடைந்துள்ளது. சுமார் 9 கி.மீ. நீளமுள்ள இந்த மெட்ரோ ரயில் பாதையானது, வடசென்னை பகுதியை இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சென்னை கடற்கரை மற்றும் அத்திப்பட்டு இடையிலான நான்காவது ரயில் பாதையானது ரூ.293.40 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தால் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு இடையிலான பயணம் எளிமையாகும். சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்களை இணைக்கும் வகையிலான இந்தத் திட்டத்தால் ரயில் பயணம் எளிதாகும்.

**ரூ.423 கோடியில் மின்வழித் தடம்:** விழுப்புரம்-கடலூர்-மயிலாடுதுறை-தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை-திருவாரூர் இடையிலான ஒற்றை வழி ரயில் பாதையானது ரூ.423 கோடியில் மின்வழித் தடமாக மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம், ரூ.14.61 லட்சம் அளவுக்கு தினமும் எரிபொருள் சேமிக்கப்படும். இந்த மூன்று திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.4,486.40 கோடியாகும்.



சென்னையில் பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை தொடக்கி வைக்க உள்ள ரூ.3,770 கோடி வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் மெட்ரோ ரயில் தடத்தை ஆய்வு செய்த மத்திய வீட்டு வசதி – நகர்ப்புற விவகார துறைச் செயலர் துர்கா சங்கர் மிஸ்ரா. உடன், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், இயக்குநர்கள் சுஜாதா ஜெயராஜ் (நிதி), ராஜீவ் நாராயணன் துவிவேதி (திட்டம்), ராஜேஷ் சதுர்வேதி (இயக்கம்).

இந்தப் புதிய திட்டங்கள் அனைத்தையும் பிரதமர் மோடி தொடக்கி வைக்கிறார்.

**உள்நாட்டிலேயே...** முழுவதும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட அர்ஜுன் போர் டாங்கியை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். இந்த தளவாடமானது, 15 கல்வி நிறுவனங்கள், 8 ஆய்வகங்கள் மற்றும் பல்வேறு சிறு-குறு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அடிக்கல் நாட்டும் விழா:** தமிழகத்தில் ரூ.3,640 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டவுள்ளார். கல்லணை கால்வாய் சீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் திட்டத்துக்கும் அவர் அடிக்கல் நாட்டவுள்ளார். இந்தத் திட்டம் ரூ.2,640 கோடியில் செயல்படுத்தப்படும். இதன் மூலம், காவிரி டெல்டா பகுதிகளுக்கு நீரைக் கொண்டு செல்வது எளிதாகும்.

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகம் சார்பில் ரூ.1,000 கோடியில் ஆராய்ச்சி வளாகம் அமைக்கப்பட உள்ளது. இதற்காக சென்னையை அடுத்த தையூரில் 2 லட்சம் சதுர மீட்டரில், மிகப்பெரிய வளாகம் கட்டப்படுகிறது. இதற்கு பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார். இந்த விழாவில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொள்கின்றனர்.

## மெட்ரோ ரயிலில் இன்று இலவச அனுமதி

சென்னையில் மெட்ரோ ரயிலின் அனைத்து வழித்தடங்களிலும் ஞாயிற்றுக்கிழமை (பிப்.14) ஒரு நாள் மட்டும் இலவசமாக பயணிக்கலாம் என்று மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட விரிவாக்கத் திட்டத்தில், வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் விம்கோ நகர் வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை தொடங்கவுள்ளது. இதையடுத்து, அனைத்து மெட்ரோ ரயில் வழித்தடங்களிலும் ஞாயிற்றுக்கிழமை மட்டும் இலவசமாக பயணம் செய்ய மெட்ரோ ரயில் நிறுவனம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி, அனைத்து மெட்ரோ ரயில் வழித்தடங்களிலும் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 11 மணி வரை பயணிகள் இலவசமாகப் பயணம் செய்யலாம்.